மெட்ரோ ரயில் நிலையங்களில்

# முன்னெச்சரிக்கையாக கிருமிநாசினி தெளிப்பு

## ● சென்னை சென்ட்ரல் உட்பட 2 இடங்களில் நடவடிக்கை

■ சென்னை

கோவிட் - 19 வைரஸ் அச்சுறுத்தலை ஒட்டி, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சென்னை சென்ட்ரல் மற்றும் விமான நிலைய மெட்ரோ ரயில் நிலையங்கள் கிருமிநாசினி மூலம் சுத்தம் செய்யப்பட்டன.

இதுதொடர்பாக சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் நேற்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

மெட்ரோ ரயில்களில் பயணிப்பவர்களின் நலனுக்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், கோவிட் - 19 வைரஸை தடுப்பதற்கான பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



▲ கோவிட்-19 வைரஸ் தடுப்பு நடவடிக்கையாக சென்னை சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையம் முழுவதும் கிருமிநாசினி தெளித்து சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்ட ரயில் நிலைய பணியாளர்கள்.

### தூய்மைப் பணிகள்

மெட்ரோ ரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ ரயில்களில் தொடர்ந்து தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கிடையே, மெட்ரோ ரயில் நிறுவனம் அசென்ட்யா ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்துடன் இணைந்து சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில் நேற்று முன்தினமும், விமான நிலை மெட்ரோ ரயில் நிலையத்தில் நேற்றும் கிருமிநாசினி தெளிப்பு பணி மேற்கொள்ளப்பட்டன.

மெட்ரோ ரயில் பயணிகள் மற்றும் பொதுமக்களுக்கு செல்போன் மூலம் கோவிட் - 19 வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பான குறுஞ்செய்தி அனுப்பப்பட்டு வருகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.